# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி

**OS.No. 34/2015, நாள்.09.08.2023**

**போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டடது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ச் கிளர்க் திரு. ராமன் அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | ராமச்சந்திரன் | **வயது** | 56 |
| **த/பெ. க/பெ.** | கோவிந்தன் | **மதம்** | |
| **முகவரி** | பாரூர் | **தொழில்** | கோவில் அர்ச்சகர் |

<u>பி.சா. 1 ஆஜர். வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>

சென்னை உயர்நீதிமன்றத்தின் வாதி எனக்கு எதிராகவும், மற்ற பிரதிவாதிகளுக்கு எதிராகவும், போலீஸ் பாதுகாப்பு கேட்டு மனு தாக்கல் செய்திருந்தார் என்று சொன்னால் சரிதான். **அந்த சென்னை உயர் நீதிமன்ற உத்தரவு Crl.OP.No.24275/2017, தேதி 04.06.2019 ன் உத்தரவின் இணையதள உத்தரவின் நகல் வா.சா.ஆ.27 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வா.சா.ஆ.24 ஆவணமானது வாதியின் தகப்பனாரால் வாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பொய்யானது ஆகும். மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் வழக்கை நடத்த நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது என்று சொன்னால் சரிதான். சொத்தை அனுபவம் செய்து வருபவர்களுக்குதான் அடங்கல் கொடுப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்தில் பசலி 1421 ல் சர்வே எண். 241/2 ல் உள்ள நிலம் மட்டும் P.M ஆறுமுககவுண்டர், S/o. லேட் மஞ்சகோணகவுண்டர் 1421 ல் சாகுபடி செய்து வருகிறார் என்று குறிப்பிடப்பட்டது என்று சொன்னால் அது தவறானது ஆகும். வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ.22 ஆவணங்களான கந்தாய இரசிதுகள் P.M. ஆறுமுக கவுண்டர் பெயரில் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் யார் பணம் கொடுத்தாலும் கந்தாய இரசீது கொடுத்துவிடுவார்கள். நான் சொல்வது தவறு என்றும் அனுபவத்தை கந்தாய இரசீதுகள் P.M. ஆறுமுக கவுண்டருக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பொய்யானது ஆகும். வா,சா.ஆ., 23 ஆவணம் வாதியால் குத்தகை பணம் கட்டியதற்கான கருவூல இரசீது என்று சொன்னால் அது பொய்யாகும்.

வா.சா.ஆ.26 ஆவணம் 2018 வருடம் வாதி தாவா சொத்தை பொறுத்து குத்தகை செலுத்தியதற்கான கருவூல இரசீது என்று சொன்னால் அது பொய்யானது ஆகும். வாதி 1977 ஆம் ஆண்டு வாதிக்கு தீர்ப்பான காலத்தில் இருந்து இன்று வரை தாவா சொத்திற்கு கந்தாய இரசீதும், குத்தகை பணமும் தொடர்ந்து செலுத்தி வருகிறார்கள் என்று சொன்னால் அவ்வாறு செலுத்தவில்லை அது தவறானது ஆகும். வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் அரசால் முறையாக வழங்கப்பட்டுள்ளது என்றும், அதை நான் பொய்யானது என்று சொல்ல உரிமை இல்லை எ ன்றும் மேற்படி ஆவணங்கள் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணங்கள் என்றும் சொன்னால் சரியல்ல. கிருஷ்ணகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 345/1975 வாதியால் தாக்கல் செய்யப்பட்டு அவருக்கு ஆதரவாக தீர்ப்பு அளிக்கப்பட்டது என்றும், பின்னர் நாங்கள் சிறப்பு சார்பு நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு எண். 59/1994 தாக்கல் செய்து அந்த மேல் முறையீடும் வாதிக்கு சாதகமாகவும், எங்களுக்கு எதிராகவும் தீர்ப்பளிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் மறுபடியும் மேல் முறையீடு செய்து எங்களுக்கு ஆதரவாக தீர்ப்பு பெற்றுள்ளோம். என்னுடன் பிறந்தவர்கள் நான்கு சகோதரர்களும், மூன்று சகோதரிகளும்உள்ளார்கள். அவர்கள் கோவிலில் நான் பூஜாரியாக செயல்பட அனுமதி அளித்துள்ளார்கள். அதற்கு எழுத்து மூலமான ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. பி,சா.ஆ. 8 ஆவணத்தில் இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர், பலவகை மனு எண். 16/2021 ல் நான் பூசாரியாக செயல்படுவதற்கு அனுமதியளித்ததாக தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி விவரம் தவறு என்று தெரியவந்தால் மேற்படி உத்தரவு இரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கோவிலானது மூன்று பஞ்சாயத்துக்களில் அடங்கியுள்ள 22 கிராமங்களில் உள்ள பொதுமக்களும் வழிபாடு செய்கிறார்கள் என்றால் சரிதான். அந்த கிராம மக்களிடம் எனது தகப்பனார் இறப்பிற்கு பிறகு நானே பூசாரியாக செயல்படுகிறேன் என்று அனுமதி கேட்டேனா என்றால் அது பரம்பரையாக வருவதால் நான் அனுமதிகேட்கவில்லை. பட்டாளம்மன் கோவிலுக்கு நான் அறங்காவலரும் கிடையாது, பூசாரியும் கிடையாது

**இந்து சமய அறநிலையத்துறையின் உத்தரவானது தவறு என்றும் சொன்னால்அது**

**பொய்யாகும். பட்டாளம்மன் கோவிலுக்கு எனது தகப்பனாருக்கு பிறகு வேறு யாரையும் பூசாரியாக நியமனம் செய்யவில்லை என்றும் அது பரம்பரையாக வருவதில்லை என்றும் இந்து சமய அறநிலையத்துறையில் முறையாக விசாரணை செய்தால் அவர்கள் போட்ட உத்தரவை ரத்து செய்துவிடுவார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் முறையாக பூசாரியாக நியமனம் செய்யப்படவில்லை என்றும், மேற்படி கோவிலுக்கு நானே அறங்காவலர், நானே பூசாரி என்று உரிமை கொண்டாடுவது சட்டப்படியும், நியாயப்படியும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நிரந்தரமாக நானே அறங்காவலர் என்றும். பூசாரி என்றும் எவ்வித உத்தரவும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கும் எனக்கும் எவ்விதசம்மந்தமும் இல்லை என்றும், வாதிக்கு நான் எவ்வித தொந்தரவு செய்யக்கூடாது என்றும் சொன்னால் சொத்து பரம்பரையாக என்னிடம்தான் உள்ளது. சொத்து என்னிடம் உள்ளதை காட்டுவதற்கு தொடர்சியாக கந்தாய இரசீது, அடங்கல் தாக்கல் செய்துள்ளேன். நான் தற்போது வரை அவ்வாறு எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை. நான் 50 கந்தாய இரசீதுகளை தாக்கல் செய்துள்ளேன். அடங்கல் எத்தனை வருடங்களுக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று நினைவில் இல்லை. ஆனால் கொடுத்துள்ளேன். வாதிக்கு தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. கிருஷ்ணகிரி சிறப்பு சார்பு நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு வழக்கு எண். 59/1994 வழக்கின் தீர்ப்பின் மீது நாங்கள் எவ்வித மேல் முறையீடும் செல்லவில்லை, அதன் பிறகு எனது தகப்பனார் சேலம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து எங்களுக்கு ஆதரவாக தீர்ப்பாகியுள்ளது. நாங்கள் சேலத்தில் எவ்வித வழக்கும், தாக்கல் செய்யவில்லை என்றும், நான் பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 1977 ஆம் ஆண்டு முதல் இன்று வரை வாதிகள் தாவா சொத்துக்கு கந்தாய இரசீதும், குத்தகை பணமும் செலுத்தி அனுபவம் செய்து வருவதால் வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு வழக்நவேண்டும் என்று சொன்னால் சொத்து எங்களிடம்தான் உள்ளது.**

**சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.**

S V SHANMUGANATHAN
District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.**